விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 065 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 10 வியாழக்கிழமை (22.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=

நீதிமன்ற தீர்மானங்களை ஆராய்ந்த பின்னே

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை

### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களை ஆராய்ந்ததன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர், கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

## அனைவரும் ஒன்றுபட்டால் நாடு அபிவிருத்தி அடையும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(திருகோணமலை)

அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டால் நாட்டை துரித அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல முடியும். அதனால் எதிர்கால சந்ததியினருக்கு மிக வும் பாதுகாப்பான 15

# தொப்புள்கொடி உறவுகளுக்குள் விரிசல்

- கச்சதீவு திருவிழாவை பகிஷ்கரிப்பதாக தமிழக வேர்க்கோடு பங்குத் தந்தை அறிவிப்பு.
- மீனவர் விவகாரங்களால் இலங்கை - இந்திய தமிழ் உறவுகள் இடையே பாதிப்பு.



3ஆம் பக்கம் பார்க்க

## பண வீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் 2024 ஜனவரியில் 6.5 ஆக உயர்ந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, இலங்கையின் பண 15

## யாழ்.இந்திய துணைத் தூதராக சாய் முரளி



15

## 10 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் பெண் கைது

(கொழும்பு)

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு அதிக விலையில் போதை மாத்திரைகளை விற்பனை செய்ததாக கூறப்படும் மருந்தகம் ஒன்றின் பெண் உரிமையாளர் ஒருவர் கொழும்பில் கைது செய்யப் 15

## உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல்

### சபையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும் போதே இந்தத் தகவலை வெளியிட்டார். 15

## யாழ்.பல்கலை மாணவன் வீதி விபத்தில் உயிரிழப்பு

### நாய் குறுக்கே பாய்ந்ததால் விபரீதம்



(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பரிதாபமாக 04

## புதிய கொள்கையின் கீழ் வாகனங்கள் இறக்குமதி

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ



(கொழும்பு)

புதிய கொள்கையின் கீழ் இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித் 04

## போதைக்கு எதிரான நடவடிக்கை ஒருபோதும் நிறுத்தப்படமாட்டாது

### அமைச்சர் டிரான் அலஸ் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்குவதற்கும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் நிறுத்தத் தயாரில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் பலி

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்காகி மூன்று மாத கர்ப்பிணித் தாயொருவர் உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மொரவெவ ஆறாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த இமேஷா குமாரி (வயது- 23) என்பவரே மாடு கட்டுவதற்காகச் சென்றபோது பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளார்.

மூன்று வயது குழந்தையின் தாயான குறித்த கர்ப்பவதிப் பெண் மஹதிவுல் வெவ பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனிக்காத நிலையில் உயிரிழந்திருந்தார். (ம-7)


வடமராட்சியின் சிகரம்

OXFORD ENGLISH ACADEMY

P.K.Lane Pointpedro

மேலும் சில பிரிவுகள் ஆரம்பம்

23.02.2024

❒ வெளிநாடு செல்வோருக்கான விசேட ஆங்கில வகுப்பு
(2 ஆவது பிரிவு - 9.00AM)

❒ IELTS Exam எடுக்கவுள்ள மாணவர்களுக்கு ஏற்ற வகையிலான அடிப்படை ஆங்கில வகுப்பு
(2ஆவது பிரிவு - 10.00AM)

❒ வேலைவாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ளவும் மற்றும் வெளிநாடு செல்வதற்கு ஆங்கில புலமையை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய ஆவணம் O/L ஆங்கில பாட certificate ஆகும். எனவே O/L ஆங்கில பரீட்சைக்கு மீளவும் தோற்றவுள்ளவர்களுக்கான வகுப்பு
(2 ஆவது பிரிவு - 3.00Pm)

பிரபல ஆசிரியர்

B.Jothy

PG Dip.in.Teaching English(Second Upper), B.Com(Hons), PGDE, M.Ed, M.A.in Pub.Adm.(Merit)

அனுமதிக்கு முந்துங்கள்

தொடர்புகளுக்கு:

077 668 9066

(C-8390)



Show Money

விசா பெற்றுக்கொள்வதற்காக சகல நாடுகளுக்கும் Show money வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : 074 173 7684

(19211)


### மரண அறிவித்தல்



தோற்றம் 27 - 05 - 1951 | மறைவு 20 - 02 - 2024

**கலாபூசணம் திருமதி கோகிலமணி ஜெகானந்தராஜா**

(ஓய்வு நிலை ஆசிரியை, யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)


மூத்த விநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கோகிலமணி ஜெகானந்தராஜா அவர்கள் 20.02.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொ.ஜெகானந்தராஜா(ஓய்வு நிலை ஆசிரியர், யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற டானியல் - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தேவமணி, காலஞ்சென்ற தேவமதுரம், வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மோசஸ், காலஞ்சென்ற செல்வராணி, றீற்றா கமலவேணி மற்றும் தேவராஜா, அழகம்மா, புஸ்பமலர், செல்வராணி, யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.02.2024) வியாழக்கிழமை இல.181,மூத்த விநாயகர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

181, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே இல. : 076 042 2984 (C-8389)

தகவல்: குடும்பத்தினர்

மணிவிழா

நாயகனுக்கான

சேவை நலன் பாராட்டு

திரு. சிவகுரு சின்ராசா

அகமது நிறைந்து
கல்விதனை வளர்த்து
அர்ப்பணித்து
அரும்பணியாற்றி
ஆசிரியர் மாணவர்
மனங்களில் நிறைந்து

காலத்திலும்
ஞாலம் மறவாத
நின் பணி போற்றி

சேவைக்கு விடைகொடுக்கும்
மணிவிழா நாயகனே
உம்மை வாழ்த்தி
வழியனுப்புகிறோம்
நீவீர் நீடூழி
வாழிய வாழியவே

வாழ்த்துவோர்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்பசை, சவர்க்காரம் உள்ளிட்ட 30 பொருட்களில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள்

## சுற்றுச் சூழல் நீதிமையம் நடத்திய ஆய்வில் தகவல்

**(கொழும்பு)**

**சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கும் பல்வேறு வகையான சவர்க்காரம், கிருமிநாசினிகள், சலவைத்தூள், நீரை உட்புகவிடாத துணிகள் போன்றவற்றில் உடலின் ஹார்மோன்களுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் இருப்பதாக சுற்றுச்சூழல் நீதி மையம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

கூடுதலாக சில ரெயின் கோட்டுகள் மற்றும் ஏப்ரன்களில் மனித ஹார்மோன்களின் செயற்பாட்டை மோசமாக பாதிக்கும் இரசாயனங்கள் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

இந்த இரசாயனங்களால் சிறுநீரக புற்றுநோய், டெஸ்டிகுலர் புற்றுநோய், தைராய்டு நோய், கர்ப்ப கால உயர் ரத்த அழுத்தம், ரத்தம் மற்றும் தாய்ப்பாலின் மூலம் தாயிடமிருந்து குழந்தைக்கு இந்த இரசாயனங்கள் பரவ வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பாலிபுளோரோஅல்கைல், மீதில்பரபின், பாபில்பரபின், ஐசோபிரைல்பரபின், பியூட்டில்பரபின், ஐபென்டைல்பரபின் போன்ற பல்வேறு இரசாயனங்கள் இந்த ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக பாலிபுளோரோ அல்கைல் பொருட்கள் நீரில் கரையக்கூடியவை. எனவே அவை தண்ணீரின் மூலம் மனிதர்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் உடலுக்குள் நுழைகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சுற்றுச்சூழல் நீதி மையம் மற்றும் சர்வதேச மாசு ஒழிப்பு வலையமைப்பு இணைந்து நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. (நி-5-6)

# கச்சதீவு திருவிழாவை பகிஷ்கரிப்பதாக தமிழக வேர்க்கோடு பங்குத்தந்தை அறிவிப்பு



(சென்னை)


கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை மற்றும் நாளை மறுதினம் நடைபெற உள்ள நிலையில் திருவிழாவை பகிஷ்கரிப்பு செய்வதாக கச்சதீவு புனித பயண ஒருங்கிணைப்பாளர் வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா தொடர்பில் வெளியிட்ட செய்தி குறிப்பிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

விசைப்படகு கடற்றொழிலாளர்களின் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக திருப்பயணிகளை அழைத்துச் செல்ல முடியாததால் கச்சதீவு திருவிழா இரத்து செய்யப்படுவதாகவும் இந்த விழாவில் இந்திய பக்தர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# வணிகக் கடன்களை மீளச் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் வீழ்ச்சி

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



(கொழும்பு)

வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும் நிதி நிலைமை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மறுசீரமைப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒரு தரப்பினர் எதிர் கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து மாத்திரம் விசேட கவனம் செலுத்த முடியாது.

ஒட்டுமொத்த மக்களின் நலனையும் கருத்திற்கொண்டுதான் நிதி நிலைமை குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட வணிக கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

நாட்டில் 5 கோடியே 75 இலட்சம் வங்கி வைப்பாளர்கள் உள்ளனர். இவர்களில் 60 சதவீதமான வைப்பாளர்கள் 5,000 ரூபாவுக்கும் குறைவான வைப்புக்களையே வைத்துள்ளனர்.


ஆகவே நிதி நிலைமை தொடர்பில் தற்போது மறு சீரமைப்புக்கள் ஏதேனும் செய்தால் அதனால் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படுமா என்பது குறித்து மத்திய வங்கிவிசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# அதிக வறட்சியான காலநிலை உடலுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும்

## அதிக நீரருந்துமாறு மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மனித உடலுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ஹேமா வீரகோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இதனால் மக்கள் அதிகளவில் தண்ணீர் அருந்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன் வெயிலில் பயணம் செய்தால் ஹெல்மெட் அல்லது குடை மற்றும் சன் கிரீம் பயன்படுத்துமாறு வைத்தியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் வெள்ளரிக்காய், முலாம்பழம் போன்றவற்றைத்தொடர்ந்து உட்கொள்வது உடலுக்கு நல்லதுஎன்றும்அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் 30 பந்து பரிமாற்ற துடுப்பாட்ட போட்டி நாளை ஆரம்பம்


ஜொலிஸ்ரார்


யாழ்.ஜொனின்ஸ்


யாழ்.பல்கலைக்கழகம்



கிரிஸ்கொப்பர்ன்

விக்கிரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட போட்டி-2024 நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

குறித்த தொடரில் 6 அணிகள் கலந்து கொண்டு விளையாடவுள்ளன.

இந்நிலையில் தொடரின் முதலாவது போட்டி நாளை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்.ஜொனின்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.

அதேவேளை பிற்பகல் குறித்த மைதானத்தில் இடம்பெறும் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து கிரிஸ்கொப்பர்ன் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## புதிய கொள்கை...

துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் உபகுழு கூடியபோது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அதன்படி இந்த உப குழுவில் வாகன இறக்குமதி தொடர்பான கொள்கையை முன்னெடுப்போம் என்றும் கடந்த 15 - 20 வருடங்களாக எந்த கொள்கையும் இல்லாமல் வாகனங்களை இறக்குமதி செய்து வருகிறோம்.

அத்துடன் வாகனங்கள் போன்ற ஏராளமான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

எனவே, புதிய கொள்கையுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை வழங்குவோம் என நம்புகிறோம் எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (ம-7)

## யாழ்.பல்கலை...

உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக 1ஆம் வருட கலைப் பிரிவில் கல்வி பயிலும் 22 வயதுடைய ரமேஷ் சகீந்தன் என்ற மாணவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டிலிருந்து நேற்று அதிகாலை நீர்வேலிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வீதியின் குறுக்கே பாய்ந்த நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)


## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 986 5457

(19213)


# பௌத்த பிக்குகள் எவரும் பாராளுமன்றம் வரக்கூடாது

## இராஜாங்க அமைச்சர் டயானா கமகே

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் பாராளுமன்றத்துக்கு வரக்கூடாது. விகாரைகளில் இருந்து அறத்தைப் போதிக்க வேண்டும். காவியுடை அணிந்து வருபவர்களுக்கு மக்கள் இனிமேல் வாக் களிக்கக் கூடாது, விகாரையிலேயே இருக்கச் சொல்லுங்கள். பாராளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர், நாலக கொடஹேவா ஆகியோரின் ஆலோசனைகளினால் தான் கோட்டபய ராஜபக்ஷ பாரிய நெருக்கடிக்கு உள்ளானார் என சுற்றுலாத்துறை அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பௌத்த பிக்குகள் பாராளுமன்றத்துக்கு வருகை தரக் கூடாது, அவர்கள் விகாரைகளில் இருந்து தர்மத்தைப் போதிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

அன்று ஆளும் தரப்பிலிருந்தார். இன்று எதிரணியில் இருக்கிறார். நாளை எங்கிருப்பார் என்று தெரியவில்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் கட்சி தாவுவதை பிரதான அறமாகக் கொண்டுள்ளார்.

ஆகவே இனிவரும் காலங்களில்" காவி உடை அணிந்து வருபவர்களுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது. விகாரையில் இருந்து தர்மத்தை போதியுங்கள்" என்று குறிப்பிட வேண்டும் என்றார். (ம-7)


## கிளி/பளை மத்திய கல்லூரி

(தேசிய பாடசாலை)

### பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 03.03.2024 (ஞாயிறு) பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு சகல அங்கத்துவ பழைய மாணவர்களையும் சமுகம் அளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

[illegible]
(செயலாளர்)

(C-8311)



## நாகபூஷணி திருமண சேவை

மகளிருக்கு இலவசம் (22/02, 23/02, 24/02)

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.

மிகப்பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 077 138 7596, 071 999 9306

(19214)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கப்பட்ட மின்கட்டணம் அதே அளவில் குறைக்கப்படும்

## மின்சக்தி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

**கடந்த ஒக்டோபர் மாதத்தில் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம், அதே அளவில் குறைக்கப் படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதற்கமைவாக வீடுகள், மத வழிபாட்டுத்தலங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களுக்கு அதிகரிக்கப் பட்ட மின் கட்டணம், அதே வீதத்தில் குறைக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபரில் வீடுகள், மத வழிபாட்டுத்தலங்கள், அரச நிறுவனங்களுக்கு 18% மின் கட்டண அதிகரிப்பும் தொழில் துறை மற்றும் சுற்றுலா ஹோட்டல்களுக்கு 12%அதிகரிப்பும் அரச நிறுவனங்களுக்கு 24% மின் கட்டண அதிகரிப்பும் மேற் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த மின்கட்டண அதிகரிப்பு வீதத்தை முற்றாக இல்லாமல் செய்து, மின் கட்டண குறைப்பை மேற் கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்ததாக அமைச்சர் தெரிவித்தார். (நி-5-6)



## தொழுநோயை கட்டுப்படுத்த
# உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட வைத்திய குழு வருகை



(கொழும்பு)

தொழுநோயை முற்றாக கட்டுப்படுத்தும் நோக்கில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட வைத்திய குழுவொன்று எதிர் வரும் மார்ச் மாதம் நாட்டிற்கு வருகை தரவுள்ளது.

நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் தொழுநோயை முற்றாக கட்டுப்படுத்துவதற்கான வரைபடத்தை உருவாக்க இந்த குழு சுகாதார அதிகாரிகளுக்கு உதவும் என தொழுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

# மாகாண சபைகளில் இருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குங்கள்

## கம்பன்பிலவினால் பிரேரணை சமர்ப்பிப்பு



(கொழும்பு)

22 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பாராளு மன்ற உறுப்பினர் உதய கம் மன்பிலவினால் நேற்று பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ள்ளது.

தனிநபர் பிரேரணையாக அவர் இதனை முன்வைத்துத் ள்ளார்.

மாகாணசபைகளில் இருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள் ளன.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். (நி-5-6)

# சுமந்திரன் தாக்கல் செய்த மனுவை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

இணைய பாதுகாப்பு சட்டத்துக்கு எதிராக பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்யாமலேயே நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள் ளார்.

இணைய பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் இந்த கோரிக்கையை விடுத்திருந்தார்.

பிரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

தற்போது இந்தச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டு சபாநாயகராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் இதில் தலையிட உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என சட்டமா அதிபர் மன்றில் குறிப் பிட்டுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின்படி, நிர்வாகம் அல்லது நிறைவேற்றுத்துறையின் நடவடிக்கையால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்ய முடியும் என்றும் மன்றில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அதன்படி அரசியலமைப் புடன் தொடர்புடைய பிரிவின் கீழ் ஒரு மனுவை சமர்ப்பிக்க எந்த சட்ட ஏற்பாடும் இல்லை என்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு மனு தாக்கல் செய்வது சட்டத்திற்கு முரணானது எனவும் சட்டமா அதிபர் குறிப்பிட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-5-6)

# இராசிபலன்

22.02.2024
மாசி 10, வியாழக்கிழமை
திரயோதசி பிற்பகல் 3.06 மணிவரை
பூசம் மாலை 6.18 மணிவரை

சுபநேரம் -8.01-9.31 மணிவரை
இராகுகாலம்-2.01-3.31 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்

வளவன்




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.




நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




அரசு வழியில் அனுகூலமுண்டு, குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள்.




சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், உற்சாமான நாள், போசன சுகமுண்டு.




உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தன வரவு திருப்திகரமாக அமையும்.




திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள்.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பொது வாழ்வில் கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

தேவையற்ற செயலில் உன் திறமையைச் செலவழிக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு கலந்துரையாடலில் மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராயும் மற்றுமொரு சிநேகபூர்வ கலந்துரையாடல் உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.



இக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நயினாதீவில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து கலந்துரையாடலின்போது கிராம மக்களால் எடுத்துக்கூறப்பட்டது. பாடசாலைகளுக்கான தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் இதன் போது பணிப்புரை விடுத்ததோடு போக்குவரத்து, குடிநீர் வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் தீர்வு காண்பதற்கான திட்ட வரைபை சமர்ப்பிக்குமாறும் இதன்போது மேலும் தெரிவித்திருந்தார். குறித்த சந்திப்பின் போது ஆளுநரால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நயினாதீவை முன்மாதிரி தீவாக மாற்ற தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்து அதற்குரிய திட்ட வரைபை விரைவில் ஆளுநரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரணவநாதன் நயினாதீவு மக்களிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# யாழ்.கல்வி வலயம் நடத்தும் தரம் 1 இற்கான கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் வலயமட்ட தரம் 1 இற்கான கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் யாழ்.வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தியின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் த.பாலராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

# வாள்வெட்டுக்கு இலக்கான மாணவர்கள் மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவர்கள் இருவர் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வாள்வெட்டு தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த இரு மாணவர்களும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டு தாக்குதலுக்கு காரணம் தெரியாத நிலையில் பருத்தித்துறை பொலிஸார் மாணவர்களிடம் வாக்குமூலங்களை பெற்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33-60)

# உறவுகளோடு ஒருநாளாவது வாழ சர்வதேசம் உதவ வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(சாவகச்சேரி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளோடு ஒரு நாளாவது வாழ சர்வதேசம் உதவ வேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உற வுகள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

உறவுகளுடைய போராட்டத்தின் 7வருட நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

2017 மாசி மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் எமது உறவு களைத் தேடிய தனித்துவமான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று ஏழு வருடங்கள் கடந்து விட்டன.

8 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் இப்போராட்டத்தில் தென்பகுதி மக்களும் எமது உண்மை யையும் நீதி யையும் வலிகளையும் உணர்ந்து எமது போராட்டத்தில் கலந்து கொண்டு ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக குரல் கொடுத்து எம்மோடு பயணித்து வருகின்றனர்.

இதேபோன்று நிச்சயமாக ஓர் நாள் சர்வதேசமும் எமது நிலைமையை உணர்ந்து எமக்கான உண்மையையும் நீதியையும் பெற்றுத் தரும்.

எமது உண்மைக்கும் நீதிக் குமான போராட்டம் ஊடாக கொலைகாரக் குடும்பத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தி அவர்கள் செய்தது இனப்படு கொலையே என்பதனை உறுதிப்படுத்தி எமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வோம்.

மேலும் இவ்வருடத்திலாவது எமக்கான தீர்வி னைப் பெற்றுத் தர முன் வர வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-5-6-30)

# தீக்கிரையான மோ.சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ்- காரைநகர் பகுதியில் வாள்வெட்டு வன்முறை கும்பலொன்றினால் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

காரைநகர் ஆலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வன்முறை கும்பல் தப்பிச் சென்றுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.(நி-5-6-33)




# 7 எருமை மாடுகளை கடத்தி சென்றவர்கள் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கனை சந்திப்பகுதியில் இரவுநேர காவல் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரின் வீதிச் சோதனை நடவடிக்கையின் போது 7 எருமை மாடுகளை ஏற்றி வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட கப்ரக வாகனமும் எருமை மாடுகளும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வாகன சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கால்நடை கொண்டு செல்வதற்கான கால்நடை வைத்தியர் சான்றிதழ் இன்மை மற்றும் வாகனத்தில் கால்நடைகள் ஏற்றிச் செல்லக்கூடியவாறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமல் மற்றும் தண்ணீர் காற்றோட்ட வசதியின்மை காரணங்களுக்காக இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி D.M.சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-5-6-33)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 200 | 305 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 600 | 650 | 600 | 800 | 660 |
| தக்காளி | 600 | 700 | 600 | 800 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 150 |
| கோவா | 400 | 450 | 500 | 400 | 600 |
| கரட் | 600 | 500 | 600 | 600 | 600 |
| பூசணி | 200 | 280 | 250 | 300 | 180 |
| புடோல் | 200 | 150 | 200 | 200 | 120 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 250 | 200 |
| சின்ன வெங்காயம் | 200 | 350 | 300 | 300 | 240-300 |
| பெரிய வெங்காயம் | 360 | 450 | 400 | 450 | 350-480 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 400 | 400 | 250 | 500 | 330 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 150 | 140 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 450 | 400 | 500 | 500 |
| பீற்றூட் | 300 | 300 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1600 | 1300 | 1000 | 1450 |
| போஞ்சி | 350 | 350 | 450 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 400 | 280 | 180 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 80 | 30-50 |
| தேசிக்காய் | 150 | 250 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 | 70-100 | 40-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 350 | 400 | 350 |
| வெங்காயப்பூ | 180 | 200 | 200 | 300 | 110 |
| முள்ளங்கி | 100 | 150 | 180 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 80 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 80 |
| [illegible] | 100 | 100 | 120 | 200 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகளின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மன்னா கண்டல் முத்தையன்கட்டு காடுகள் வழியாக புதுக்குடியிருப்பு மேற்கு பகுதிக்குள் நுழைகின்ற யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு மேற்கில் 1,947 குடும்பங்கள் வாழ்கின்ற 105 ஏக்கர் வயல் நிலம் உள்ளது.

இவ்வாண்டு காலபோகத்தில் நோய்கள் நெல்லினை அழித்ததை விட மன்னா கண்டல் முத்தையன்கட்டு காடுகள் வழியாக பெருமளவில் வருகை தந்த யானைகள் நெற்பயிர்களை கூடுதலாக அழித்துள்ளன.

அதேவேளை குடிமனைகளுக்குள் நுழைவதும் வளவுகளில் புதிதாக நடப்பட்ட தென்னைமரங்களையும் யானைகள் அழித்து வருகின்றன.

எனவே இது தொடர்பில் அதிகாரிகள் துரிதமாக யானை வேலிகள் அமைத்து யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-350)

# மன்னார் இரட்டைக்கொலை; சந்தேக நபர்கள் கைது

(மன்னார்)

மன்னார் - அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளம் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 55 வயதை உடைய நபர்களையே பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 24 ஆம் திகதி வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டதில் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி பொலிஸாரால் முற்றுகை

- ஒருவர் கைது
- 82 லீற்றர் கசிப்பு, 880 லீற்றர் கோடா மீட்பு

(தருமபுரம்)

கல்மடு சுடலை குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி முற்றுகை இடப்பட்டபோது ஒருவர் கைது செய்யப்பட்டு 82 லீற்றர் கசிப்பு 880 லீற்றர் கோடா என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன.



இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு சுடலை குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பறிமுதல் செய்துள்ளனர். இதன் போது 82 லீற்றர் கசிப்பும் 880 லீற்றர் கோடாவும் சந்தேக நபரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-316)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 296/32, தேவாலய வீதி, வட்டாரம் -02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-02 தேவாலய வீதியிலுள்ள இல 296/32 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சின்னத்துரை கைம்பெண் சரஸ்வதி என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை செல்லப்பா சின்னத்துரை மகள் செல்வநாயகி தனது பேர்த்தியாரான பொன்னையா பெண் செல்லாச்சி ஆகியவர் ஆட்சிசெய்து வந்தார் எனவும் குறித்த செல்லாச்சி காலஞ்செல்ல அவருடைய ஏக புத்திரியும் தன்னுடைய தாயாருமான சின்னத்துரை பெண் சரஸ்வதிக்கு முதுசமாக வந்தடைந்ததென்றும் குறித்த சரஸ்வதி ஆகியவர் நெடுங்காலமாக குறித்த ஆதனத்தினை ஆட்சிசெய்துவந்திருந்தார் எனவும் அக்காலத்தில் தான் விவாகம் செய்யாமல் இருந்தபடியால் தனக்கே சீதனமாக அமையவேண்டிய ஆதனமாக இருக்க வேண்டும் என வாய்மொழி மூலம் நன்கொடையளித்திருந்தார் எனவும் குறித்த ஆதனம் 35 வருடங்களுக்கு மேலாக தன்னால் தங்கு தடையற்று ஆட்சி செய்யப்பட்டு வரப்பட்டது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 7695/ 12.06.2004 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்.

**ஆறுமுகம் மகள் சத்தியபவானி** பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7696/12.06.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லப்பா சின்னத்துரை மகள் செல்வநாயகி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தங்கராசா சசிகரனும் பெண் மிதிலாதேவியும்** பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1774/ 30.10.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தசாமி இராசேந்திரனும் பெண் சத்தியபவானியும், செல்லப்பா சின்னத்துரை மகள் செல்வநாயகியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த தங்கராசா சசிகரனும் பெண் மிதிலாதேவியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தங்கராசா சசிகரனும் பெண் மிதிலாதேவியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(9206)

செயலாளர்,வலிகாமம் மேற்கு பிரதேசசபை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# தோல்வியில் முடிந்த பேச்சுவார் வலுக்கும் விவசாயிகளின் போரா

(டில்லி)

**மத்திய அரசுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் விவசாயிகள் டில்லியை முற்றுகையிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**





கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற 4 ஆம் கட்ட பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்தே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டில்லியை நோக்கிய விவசாயிகளின் போராட்டம் வலுப்பெற்றுள்ள நிலையில் டில்லியின் எல்லைப் பகுதிகளில் பரபரப்பான சூழல் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை, விவசாய கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு ஓய்வூதியம், மின்சார சட்ட திருத்த மசோதாவை இரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை

## ஆசியாவின் மிகப்பெரிய விமானக் கண்காட்சி



(சிங்கப்பூர்)

ஆசியாவின் மிகப் பெரிய விமானக் கண்காட்சி சிங்கப்பூரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

உலகின் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்தக் கண் காட்சியில் பங்கேற்றுள்ளன.

முதல் நாளான நேற்று முன்தினம் சீனாவைச் சேர்ந்த கோமாக் மற்றும் அமெரிக்காவின் போயிங் நிறுவனங்களின் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தங்கள் கையொப்ப மாகியுள்ளன.


முன்னைய ஆண்டுகளில் நடைபெற்ற சிங்கப்பூர் விமானக் கண்காட்சியில் ரஷ்ய நிறுவனங்கள் இடம் பெற்றிருந்தன.

ஆனால், உக்ரைன் போர் நடைபெற்று வரும் சூழலில் நடப்பாண்டுக் கண்காட்சியில் அந்த நாட்டிலிருந்து ஒரு நிறுவனம் கூட பங்கேற்கவில்லை.

ஆனால், காசா போர் தீவிரமாக நடைபெறும் சூழலிலும் இந்தக் கண்காட்சியில் இஸ்ரேலிய நிறுவனங்கள் பங்கேற்று தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தின. (நி-5-6)

## ஜெயலலிதாவின் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும்

### பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவு



(டில்லி)

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை மார்ச் 6, 7 ஆகிய திகதிகளில் தமிழக அரசிடம் ஒப்படைக்க கர்நாடக அரசுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1991-96 ஆம் ஆண்டில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது வருமானத்துக்கு அதிகமாக ரூ.66 கோடி சொத்து குவித்ததாக வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணையின் போது தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை பொலிஸார் ஜெயலலிதாவின் இல்லத்தில் நடத்திய சோதனையில் தங்க, வைர நகைகள், வெள்ளிப் பொருட்கள், ரத்தினக் கற்கள், கைக் கடிகாரங்கள் உட்பட ஏராளமான பொருட்களை பறிமுதல் செய்தனர்.


இவ்வழக்கின் மேல்முறையீட்டு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடந்த போது, ஜெயலலிதா காலமானார். சசிகலா உள்ளிட்ட மூவரும் பெங்களூர் மத்திய சிறையில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தனர். இந்நிலையில் பெங்களூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் நரசிம்மமூர்த்தி கடந்த ஆண்டு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்தார். அதில், கர்நாடக அரசின் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் பொருட்களை ஏலம் விட வேண்டும். அந்தத் தொகையில் இவ்வழக்கிற்காக கர்நாடக அரசு செலவு செய்த பணத்தை வழங்க வேண்டும். மீதியுள்ள பணத்தை மக்களின் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என கோரினார்.

இந்நிலையில் இவ்வழக்கு கடந்த திங்கட்கிழமை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி ஹெச்.ஏ.மோகன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, "ஜெயலலிதா தொடர்புடைய தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை தமிழக அரசிடம் கர்நாடக அரசு வருகிற மார்ச் 6,7 ஆகிய திகதிகளில் ஒப்படைக்க வேண்டும். தமிழக அரசின் உள்துறை முதன்மை செயலர், லஞ்ச ஒழிப்புத்துறை ஐஜி, புகைப்படக்காரர், வீடியோகிராஃபர் ஆகியோர் முன்னிலையில் அவை ஒப்படைக்கப்பட வேண்டும். நகைகளைக் கொண்டு செல்ல 6 இரும்பு பெட்டிகளைக் கொண்டு வர வேண்டும். இவ்வழக்கை நடத்துவதற்கு கர்நாடக அரசு செலவழித்த ரூ.5 கோடியை தமிழக அரசு செலுத்த வேண்டும். இதற்கான வங்கி வரைவோலையை தமிழக அரசு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்" எனக் கூறி இவ்வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை மார்ச் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

...ார்த்தை
...ோராட்டம்



...ளபடி, ...ஒய் வு ...திருத்த ...செய்ய ...ட பல் ...களை வலியுறுத்தி தலைநகர் டில்லி எல்லையை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# உணவு விநியோகத்தை நிறுத்திய உலக உணவுத்திட்ட அமைப்பு

## காசாவில் துயரம்



(நியூயோர்க்)

இஸ்ரேல் -ஹமாஸ் போர் 130 நாட்களுக்கும் மேலாக தொடர்கிறது. பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேலிய இராணுவ படையினர் ஹமாஸ் அமைப்பினரை அழிக்க வான் வழியாகவும் தரை வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், ஹமாஸ் அமைப்பினரின் வசம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை காசா பகுதி முழுவதும் அனைத்து இடங்களிலும் இஸ்ரேலிய இராணுவம் தேடி வருகின்றது.

இஸ்ரேல் விடுத்த எச்சரிக்கையை அடுத்து வடக்கு காசாவில் இருந்து மக்களில் பலர் கூட்டம் கூட்டமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர்.

அங்கிருந்து செல்லாமல் தங்கிய மக்களுக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டம் எனும் சர்வதேச அமைப்பின் வழியாக உணவு வழங்கப்பட்டு வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வடக்கு காசாவில் உணவுகளை விநியோகிக்க சென்ற வாகனங்களை பசி மற்றும் வறட்சி காரணமாக காசா மக்கள் சூழ்ந்து கொண்டு உணவுப் பண்டங்களை சூறையாடினர்.

ஒரு சில இடங்களில் வாகன ஓட்டுநர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் நடந்தன.

இந்நிலையில், அங்கு நிலவும் அசாதாரணமான சூழலால், உணவு வழங்குவதை உலக உணவு திட்ட அமைப்பினர் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். இது குறித்து உலக உணவு திட்ட அமைப்பு அறிவித்திருப்பதாவது,

வடக்கு காசா பகுதியில் வன்முறையும் கட்டுப்பாடற்ற சூழலும் நிலவுகிறது. அங்கு சட்டம் ஒழுங்கற்ற நிலை உருவாகி விட்டது.

பாதுகாப்பற்ற சூழலில் உள்ள மக்கள் சிறிது சிறிதாக பசி மற்றும் நோய் தாக்குதல் ஆகியவற்றால் தீவிர துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

உணவு விநியோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு பாதுகாப்பு கோரியுள்ளோம். விரைவில் விநியோகம் மீண்டும் தொடங்கப்படும் என அறிவித்துள்ளது. (நி-5-6)

...ள ...டும் ...ரவு

## ஒரே நேரத்தில்

# 6400 பயிற்சி மருத்துவர்கள் தென்கொரியாவில் ராஜினாமா

(சியோல்)

தென் கொரியாவில் 6 400 பயிற்சி மருத்துவர்கள் ஒரே சமயத்தில் ராஜினாமா செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவர்கள் ஒரே சமயத்தில் ராஜினாமா செய்ததால் மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டு நோயாளிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

தென் கொரியாவில் பத்தாயிரம் பேருக்கு 25 மருத்துவர்கள் மட்டுமே உள்ள நிலையில் மருத்துவ கல்லூரிகளில் ஆண்டொன்றுக்கு 5,000 மருத்துவர்களாக ஆக உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது.




இந்நிலையில் மருத்துவர்களின் எண்ணிக்கை அதி கரித்தால், வருங் காலத்தில் ஊதியம் குறைக்கப்படலாம் எனக்கருதிய பயிற்சி மருத்துவர்கள், அரச்சாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். (நி-5-6)



...டம் கர் ...ர்ச் 6.7 ...படைக்க ...அரசின் ...செயலர், ...பி. புகை ...ராஃபர் ...லையில் ...வேண் ...காண்டு ...களைக் ...ம். இவ் ...ர்நாடக ...காடியை ...ண்டும். ...ரைவோ ...நீதிம ...வேண் ...ழக்கின் ...ணையை ...ஒத்தி ...(நி-5-6)

# அகதிகள் பயணித்த படகு கவிழ்ந்து விபத்து

## 9 பேர் பலி



(திரிபோலி)

லிபியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகொன்று துனீசியா கடற்பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான், எகிப்து, சிரியா மற்றும் பங்களாதேஷைச் சேர்ந்த சுமார் 53 பேர் குறித்த படகில் பயணித்துள்ள நிலையில் அவர்களில் பலர் காணாமற்போயுள்ளனர் எனவும் அவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்தவர்களில் 8 பேர் பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் பாகிஸ்தானியர் எனவும் தெரியவந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ரஷ்யாவுடனான போரை முடிப்பதற்கு நீண்டதூர ஏவுகணைகள் தேவை

## உக்ரைன் பிரதமர்



(கீவ்)

ரஷ்யாவுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் வெடிமருந்துகள் அதிகளவில் தேவைப்படுகிறது என உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனை மறுசீரமைப்பது தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ... ஏற்றுமதி கொள்கையில் ஜப்பானின் கட்டுப்பாடுகளை உக்ரைன் புரிந்து கொள்கிறது. எனவே அமெரிக்காவின் புதிய இராணுவ உதவிகளை உக்ரைன் எதிர்பார்க்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன்- ரஷ்யா போர் கடந்த 2 வருடங்களாக தொடர்ந்து நடைபெறுகின்ற நிலையில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை துண்டாக்க முயற்சிக்கும் ஜே.வி.பி

## மேர்வின் சில்வா சாடல்

(கொழும்பு)

நாட்டை பிளவுபடுத்தும் நோக்கிலேயே ஜே.வி.பியினர் ஆட்சிக்குவர முயற்சிப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பொருட்களின் விலை குறைவடைந்துள்ளதாகவும் பொருட்களுக்கு தட்டுப்பாடும் இல்லை எனவும் எரிவாயு மற்றும் எரி பொருட்களுக்கு தட்டுப்பாடும் இல்லை எனவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் அது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல. ஏனென்றால் சமையல் பொருட்கள், விவசாய உற்பத்திகள், ஆடைகள் என அனைத் தும் இன்று அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு நாட்டை அதள பாதாளத்திற்கு கொண்டு சென்றவர்கள் இன்று நாட்டில் மீண்டும் ஆட்சி செய்ய திட்டமிடுகின்றனர்.

நாட்டை பிளவுபடுத்த எண்ணும் ஜே.வி.பியினர் அதற்காகவே ஆட்சிக்குவர எண்ணுகின்றனர்.

இதற்காகவா இந்தியாவுக்கு சென்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது என மேர்வின் சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

---

## கேரளா - இலங்கை

# விமான சேவைகளை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியா - கேரளாவில் உள்ள கோழிக்கோடு விமான நிலையத்தில் இருந்து இலங்கை, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக சில விமான சேவை நிறுவனங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலேசியாவை தளமாக கொண்ட ஏசர் ஏசியா மற்றும் ஃபிட்ஸ் ஏர் உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்கள் தங்களது விருப்பத்தை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

---

# ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹுசைன் அமீர் அப்துல்லாஹின் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அந்நாட்டுக்கு வருகை தந்துள்ள ஈரான்வெளிவிவகார அமைச்சர், இங்கு இடம்பெற்ற கூட்டு செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

---

# அமைச்சரவை செயலாளராக பெர்னாண்டோ நியமனம்

(கொழும்பு)

அமைச்சரவை செயலாளராக டபிள்யூ.எம். டி.ஜே. பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 14 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப் பிடப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

---

# இன்று ஒரு தகவல் 44



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கருணை

ஒரு பெரிய ஞானி!

"அவருக்கு கோபமே வருவதில்லை" அந்த நிலை எல்லாம் கடந்து வந்தவர் அப்படி என்று எல்லாரும் சொன்னார்கள்.

நம்மை மாதிரி ஒருத்தர் அவரை பார்த்தான்! அது எப்படி ஒருத்தருக்கு கோபம் வராம இருக்க முடியும் என்று அவனுக்கு சந்தேகம்.

"எப்படியாவது அவருக்கு கோபத்தை வர வைத்து பார்த்து விட வேண்டும்" என்று ஒரு ஆசை வந்து விட்டது அவனுக்கு.

உடனேஅவரிடம் போனான். வாயில் வந்தபடி கன்னா பின்னா என்று அவரை திட்டினான்.அவருக்கு கோபம் வரவில்லை. அதுமட்டும் இல்லை அவரின் முகத்தில் எந்தவித வித்தியாசமும் தெரியவில்லை. இவனுக்கு ரொம்ப ஆச்சரியம். இது எப்படி இவராலே முடியுது என்று.

"சரி....நேராகவே அதையும் கேட்டுவிடுவோம் என்று முடிவு செய் தான்". ஏங்க நான் இவ்வளவு நேரமும் உங்களை கண்டபடி திட்டி இருக்கிறேன். உங்களுக்கு கோபமே வரவில்லையா? உங்களாலே எப்படி இந்த அளவுக்கு பொறுமையாக இருக்க முடிகிறது என்று கேட்டான்.

அந்த ஞானி முகத்திலே புன்னகை! உங்களிடம் காசு இருக்கிறதா என்று கேட்டார். இவனுக்கு இன்னமும் ஆச்சரியம்! இவருக்கு கோபம் தான் வரவில்லை. காசிலே ஆசை போல இருக்கிறது என்று நினைத்து கொண்டான்.

சே..இவ்வளவு தானா என்று நினைத்து கொண்டு!

ஒரு பவுண் காசை எடுத்து அவரிடம் நீட்டினான். அவர் அதை வாங்கினார். மறுபடி அதை அவரிடம் அதை திருப்பி கொடுத்தான். "இது போதாதா இன்னமும் வேணுமா" என்று கேட்டான் இவன்.

அதுக்கு இந்த ஞானி சொன்னார் . இதோ பாருப்பா...இந்த பவுண் நாணயம் எல்லாம் உனக்கு முக்கியமாக தெரியலாம். இதனாலே எனக்கு ஒன்றும் பிரயோசனம் இல்லை. அதனாலே அதனை நான் தந்தவங்க கிட்டயே திருப்பி கொடுத்து விட்டேன் என்றான்.அதே மாதிரி நீ இவ்வளவு நேரமா திட்டின வார்த்தைகள் எதுவுமே எனக்கு பொருந்தாது. ரொம்ப கஷ்டப்பட்டு நீ அந்த வார்த்தைகளை எல்லாம் சேகரித்து வைத்திருக்கிறாய். அதனாலே அது வீணாகிவிடக் கூடாது. அதனாலே நீயே அதனை வைத்திரு என்று சொல்லிவிட்டு சிரித்து விட்டு அவர் போய் விட்டாராம்.

பெரியவர்களால் தான் இப்படி நடந்து கொள்ள முடியும். அந்த நிலைக்கு போகவில்லை என்றாலும் போவதற்கு முயற்சியாவது செய்யலாம் அல்லவா? அதற்காகத்தான் அப்படிப் பட்டவர்களை அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டும் என்கிறது.

நபிகள் நாயகம் நாள் தவறாமல் ஒரு பள்ளிவாசலுக்கு போய்க்கொண்டு இருந்தார். அவர் போகும் வழியிலே தினமும் ஒரு அம்மா வீட்டு மாடியில் இருந்து அவர் தலை மேலே குப்பையை கொட்டிக்கொண்டு இருந்தார்.

தொழுகைக்கு போகும் பொழுது எப்படி சுத்தமாக போக வேண்டும் என்பது உங்களுக்கு தெரியும். அப்படி போகும் நேரத்தில் அந்த அம்மா அப்படி செய்து கொண்டு இருந்தாங்க.

இதற்காக நபிகள் நாயகம் கொஞ்சம் கூட கோபிக்கிறதில்லை. யார் அப்படி செய்தார்கள் என்று விசாரிப்பதும் கூட இல்லை. பொறுமையாக திரும்பி வந்து வேறு ஆடை அணிந்து கொண்டு தொழுகைக்குப் போனார். இப்படி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் பள்ளிவாசலிற்கு அவர் செல்லும் போது அவர் மீது குப்பை விழவில்லை. தொழுது விட்டு வரும் சமயத்திலும் அவர் மீது குப்பை விழவில்லை.

அன்றைக்கு தான் அவர் அந்த வீட்டை திரும்பி பார்த்து இருக்கிறார். எதிர் வீட்டில் இருந்த ஒருத்தர் சொல்லி இருக்கிறார். அந்த அம்மா தெரியாத்தனமாக இப்படி செய்து இருக்கிறார் என்றார்.

அதற்கில்லை ஒவ்வொரு நாளும் இது நடக்குமே இன்றைக்கு ஏன் இது நடக்கவில்லை என்று தெரிந்து கொண்டு போகலாமே என்று வந்தேன் என்றார்.

அதற்கு அவர் அந்த அம்மா கடுமையான காய்ச்சலினால் கஷ்டப்படுகிறார். எழுந்து இருக்கக் கூட முடியவில்லை என்று கூறினார்.

உடனே நபிகள் கலங்கிப் போனார். உடனே அந்த வீட்டு கதவை தட்டி உள்ளே போனார். அந்த அம்மா குணமடைவதற்கு வேண்டிய பிரார்த்தனையையும் சிகிச்சையையும் செய்தார். ஒவ்வொரு நாளும் என்னுடைய வருகைக்காக காத்துக் கொண்டு இருந்த இவர்களுக்கா இந்த நோய் என்று கூறி வேண்டுதல் செய்தார்.

அவங்க உடம்பு மட்டும் இல்லை. மனதும் குணமாகி விட்டது. கருணை என்றால் சொன்னால் அதுக்கு இது தான் உதாரணம்! இந்த காலத்தில் எல்லாம் அந்த அளவுக்கு கருணையும் சகிப்புத் தன்மையும் இரக்கத்தையும் பார்க்க முடியுதா? ரொம்ப கஷ்டம். கடவுளுக்கே அந்த சந்தேகம் வந்து அதை சோதித்து பார்ப்பதற்காக உலகத்திற்கு வந்தாராம்.

அதாவது கடவுள் திடீரென்று பூமிக்கு வந்து ஒருத்தர் வீட்டு கதவை தட்டினார். வீட்டுக்காரன் கண்ணை துடைத்து கொண்டே வெளியே வந்தான்.சாமியை பார்த்ததும் ஒரு கும்பிடு போட்டான். கடவுள் அவனை பார்த்து உனக்கு விரோதி யார் என்று கேட்டார். அதற்கு அவன் அடுத்த வீட்டுக்காரான் தான் எனக்கு விரோதி என்று சொன்னான்.

ஏன் அப்படி என்று கடவுள் கேட்டார். அவன் எப்பவும் சந்தோசமாக இருக்கிறான் என்னால முடியவில்லை என்றான்.

கடவுள் சொன்னார்.

சரி உனக்கு என்ன வேண்டும் என்று கேள். நான் உனக்கு வரம் தருகிறேன். எதுவாக இருந்தாலும் கொடுக்கின்றேன். ஆனால் ஒரு கண்டிசன். உனக்கு என்ன பலன் கிடைக்கிறதோ அதைப்போல இரண்டு பங்கு உனது பக்கத்து வீட்டுக்காரனுக்கு கிடைக்கும் என்றார்.

சரி என்று சொல்லி விட்டு இவன் கொஞ்ச நேரம் யோசித்தான். அப்புறம் வரம் கேட்டான். என்ன தெரியுமா? சாமி என்னோட ஒரு கண்ணு தெரியாம போகனும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் இல்லம்

(நேற்றைய தொடர்ச்சி...)

பரமேஸ்வராக் கல்லூரி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் இணைந்த கல்லூரியாக அன்றிப் புதைந்த கல்லூரியாயிற்று. ஆசிரியவளமும் அறிவு வளங்களும் சேரப் புதைந்தன. பரமேஸ்வராக் கல்லூரியின் கல்லறையாக முத்துத்தம்பி மகாவித்தியாலயம் கருதப்பட்டது. ஏற்கனவே புதைந்த சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் மீளத் துயில் கொள்ளும் இடமாயிற்று. இத்தகைய சோகத்தைச் சுமக்கும் முத்துத்தம்பி மகாவித்தியாலயம் இல்லச் சிறாரின் கல்விக்காகப் பெருந் தொண்டு புரிந்தது. உயர் கல்வி வாய்ப்பை நல்கச் சிறந்த முயற்சி எடுத்தது. இல்லத்துச் சிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றனர். அது இல்லத்தின் வாழ்வியலை வரலாற்றிலே பதித்தது. ஆனால் மீண்டும் முத்துத்தம்பி மகாவித்தியாலயம் சோதனைக்குள்ளாயிற்று. இடம்பெயர்ந்த பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் ஒத்து இயங்க முடியாமல் அடைக்கலமாக தற்காலிகமாகத் தங்க வந்த போது முத்துத்தம்பி இடம் கொடுத்தது. தன் சிறாரின் வகுப்புகளை கற்பித்தலுக்காக ஒதுக்கிக் கொடுத்தது. ஆனால் இன்று வரை பலாலி ஆசிரிய கலாசாலை தனக்கென ஒரு இடம் தேடிக்கொள்ளாமல் முத்துத்தம்பியில் குந்திக்கொண்டிருக்கின்றது. நீண்ட பன்னிரு ஆண்டுகளாகி விட்டன. முத்துத்தம்பியின் கல்வி வளர்ச்சி தடுக்கப்பட்டது. ஆதரவற்ற, வறிய சிறுவர்களுக்குக் கல்வி வழங்கி அவர்களை ஆற்றல் வாய்ந்த மனிதர்களாக்கும் முத்துத்தம்பியின் சமூகப் பணி முடங்கிவிட்டது. இல்லத்தில் வாழும் சிறாரின் கல்விச்செல்வத்தை நாம் நெறிப்படுத்த வேண்டியுள்ளது. முத்துத்தம்பியின் 200 மாணவர்களின் பாதுகாவலர் என்ற கடமைப்பாடு எமக்குண்டு. இன்று உலகெங்கும் பரந்து வாழும் முத்துத்தம்பியின் பழைய மாணவர்கள் இப்பணியில் எம்முடன் இணைய வேண்டுகிறோம். இந்துபோர்ட் இராசரத்தினத்தின் இலக்கு ஏழைச்சிறுவர்களையும் ஆதரவற்ற சிறுவர்களையும் கல்வியில் மேம்பாடு அடையச் செய்வதே. அந்த இலக்கை சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிறைவேற்றப் பணியாற்ற வேண்டும். கல்விப்பேற்றை இல்லச்சிறார்கள் முழுமையாகப் பெற அடிப்படையான பள்ளிக் கல்வியை சீரான முறையிலே வழங்க ஆவண செய்ய வேண்டும். இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகின் செயற்பாட்டிற்கு ஏற்றவகையில் இல்லச்சிறாரின் கல்வியைத் திட்டமிட்டு வழங்க வேண்டியுள்ளது. அதற்காக முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தை முன்னேற்ற வேண்டி பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றுள் முதன்மையானது முத்துத்தம்பி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு இரவலாக வழங்கிய சுப்பிரமணியம் மண்டபத்தையும் வகுப்பறைகளையும் மீளப்பெற்றுக் கொடுத்தலாகும்.

இல்லச்சிறார்களின் புற நிலைக் கல்வியாகச் சில பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மரவேலை, சமையல், தையல், கைவினைப் பொருள் தயாரிப்பு, கோலம், பண்ணிசை, வீட்டுத் தோட்டம், பசு வளர்ப்பு போன்ற பயிற்சிகள் தற்போது நடைபெறுகின்றன. உயர்கல்வி வாய்ப்புப் பெறாத சிறுவர் இப்பயிற்சிகளால் எதிர்காலத்தில் பயன்பெறுவர். பெண் குழந்தைகளே தொகையில் கூடியவரா இருப்பதால் இப்பயிற்சிகளை மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டியுள்ளது. இல்லத்து வாழ்வை முடித்து இளைஞராக சமூகத்துள் நுழையும் போது குழு நிலையில் அவர்கள் தொழிற்பட சில தொழில் நிலையங்களையும் சைவவித்தியா விருத்திச்சங்கம் திட்டமிட வேண்டியுள்ளது. குறிப்பாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் அற்ற சிறுவர் வளர்ந்த பின்பும் குடும்பம் போல இணைந்து வாழலாம். மேலும் எமது மரபில் இன்னமும் 'அநாதை இல்லத்தில் வாழ்ந்தவர்' எனத் தரக்குறைவாய் நோக்கும் நிலை முற்றாக மாறிடவில்லை. இத்தகைய மரபுக் கயிற்றில் தொங்கும் மனிதர்களை நேரில் காணும் எமது இல்லச்சிறார்கள் மனம் ஒடிந்து விடக்கூடாது. 'இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்' என்ற ஔவை மூதாட்டியின் முதுமொழியே எமது கவசம். மனிதனை மனிதனாக நோக்குவதே எமது பார்வை. அன்பும் தொண்டுமே எமது தோள்களின் சுமைகள். இதுவே எமது இல்லச்சிறார்கள் நினைவில் பதிய நாம் முயற்சி செய்கிறோம். எமது முய்றசிக்கு இடையூறு ஏற்படும் வேளைகளில் எமது வழிகாட்டியான பெரியார் இந்துபோர்ட் இராசரத்தினத்தை நினைக்கின்றோம். மனச்சோர்வு அகல மீண்டும் தொண்டுப்பணியில் இணைகிறோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் அண்மையில்பவளவிழா ஆண்டினை நினைவு கூர்ந்தது. பெரியார் இந்துபோர்ட் இராசரத்தினத்தின் சிலையையும் பணிமனை வளவிலே நிறுவியது. இல்லச்சிறாரின் உள்ளத்திலே அவருடைய பணியை ஆழமாகப் பதிய வைக்க இது உதவிற்று. இன்னும் அவர் பெயரில் ஆண்கள் இல்லம் அழைக்கப்படுவது அவர் நினைவை நாளும் சிறார்கள் பெற வாய்ப்பு அளிக்கிறது. இடப்பெயர்வினால் சிதைந்த கட்டடங்கள் சீர் பெற்றுள்ளன. தொண்டு நிறுவனங்களின் உதவியால் 3 புதிய மண்டபங்கள் உருவாகியுள்ளன. இருந்தும் இல்லத்தில் சேர விரும்பும் சிறார் தொகை நாளும் தொடர்கிறது. 200 பேருக்குமேல் இடவசதி இன்மையால் சிறாரை ஏற்பதில் எமக்குக் இடைஞ்சல்கள் பல இருக்கின்றன. பொருள் வளமும் போதாது. ஒரு சிறுவனுடைய மாதாந்த பராமரிப்பு செலவு சிக்கன நிலையில் மாதம் 3000 ரூபா ஆகிறது. 200 பேருடைய ஒரு மாதச் செலவு 600,000 ரூபா ஆகிறது. இப்பணத்தைப் பெறுவதற்கு நிரந்தரமான வருவாய் எதுவும் இப்போது இல்லை. இல்லம் அரசாங்கப் பதிவு பெற்றிருப்பதால் ஒரு பிள்ளைக்கு மாதம் 300 ரூபா கிடைக்கிறது. இப்பணம் மாதச் செலவில் பத்திலொரு பங்கையே ஈடு செய்யமுடியும்.

இல்லத்தில் சேர விரும்பும்பும் சிறுவர்களை இடம் இல்லையென கூறி மறுப்பது எமக்கு மிகத்துன்பமாக உள்ளது. போரின் கொடுமையால் குடும்பத்தலைவனை இழந்த குடும்பத்தில் குழந்தைகளின் ஒரு வேளை உணவையே பெற்றுத் தர முடியாத ஏழ்மை நிலையில் தாய்மார் வருந்துகின்றனர். தமகு குழந்தைகளில் ஒன்றாவது இல்லத்தில் சேர்ந்து வயிற்றுப்பசி தீர்ந்து வாழட்டும் என்ற நினைப்போடு எமது பணிமனை வாசலில் வந்து வரம் கேட்பவர் போல நிற்கிறார்கள். தாயின் மனக்கவலையை நானும் தீர்ப்பேன் என்ற உறுதியோடு வீட்டையும் உடன் பிறப்புகளையும் பிரிந்து வாழ உறுதிபூண்டு வரும் பூங்குருவிகளைக் காணும் போது உள்ளம் மாய்ந்து போகிறது. தன் அன்பான அரவணைப்பையே தியாகம் செய்ய முன் வந்த அந்த சின்னக்குருவிக்கு அடைக்கலம் தர வேண்டும் என ஆர்வம் மேலிடுகிறது. அதற்காக அனைவரிடமும் மடிப்பிச்சை ஏந்து என மனம் ஏவ முயற்சி தொடங்குகிறது. நாளைக்கு இச் சிறுவன் மனிதர் துயர்தீர்க்க வந்த மனுக்குல வள்ளலாக மாறுவான். முதுமை எம்மை வந்து தழுவும் போது எமக்கெல்லாம் முதுகெலும்பாய் நின்று உதவுவான். எமது மனிதப் பிறவியின் மாண்பினை, உயிர் காக்கும் பண்பினை, நட்புடன் உறவாடும் பாங்கினை அனைவரும் அறியப் பணிசெய் வான். இன்று எமது இல்லத்திலே வாழ்ந்து நல்ல மனிதராக எங்கெங்கோ வாழ்பவர் தமது சிறுவர் நிலை வாழ்வின் செம்மையை உணர்ந்து கொடை நல்கி வருவது எமக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. அதுவே எம் பணியைத் தொடரப் புது வலியும் ஆற்றலும் உளநிறைவும் தந்துநிற்கிறது என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)



முனைவர் ச.மனோன்மணி
முன்னாள் இல்லத்திட்டப் பணிப்பாளர்,
சைவ சிறுவர் இல்லம்,
சைவ அபிவிருத்திச் சங்கம்

# 50 சீன சொகுசு கப்பல்கள் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

சீன சுற்றுலாப் பயணிகளுடன் 50 சொகுசு பயணிகள் கப்பல்கள் பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி சில கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திலும், மேலும் சில கப்பல்கள் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் நங்கூரமிடவுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த ஒரு சொகுசு பயணிகள் கப்பலில் சுமார் 1000 பயணிகள் வரலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஒரு கப்பல் இரண்டு நாட்களுக்கு இந்த நாட்டின் துறைமுகங்களில் நங்கூரமிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இவ்வருடம் பெப்ரவரி 16ஆம் திகதி வரை இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 350,000 ஐ தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இறக்குமதிக்கு விதிக்கப்படும் பண்ட வரி அதிகரிப்பு

(கொழும்பு)

உளுந்து, பாசிப்பயறு, கௌபி, சோளம், குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கு விதிக்கப்படும் விசேட பண்ட வரியை உயர்த்தி புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி உளுந்துக்கு இது வரை ஒரு கிலோகிராமிற்கு 200 ரூபாவாக காணப்பட்ட விசேட பண்ட வரி 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், கௌபி விதை, குரக்கன் விதைகள் உள்ளிட்டவைக்கான இறக்குமதி விசேட பண்ட வரி ஒரு கிலோகிராமிற்கு 70 ரூபாவிலிருந்து 300 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.


இது தவிர சோளத்துக்கும் 25 ரூபாய் விசேட பண்ட வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பெரமுனவில் இணையுமாறு பொன்சேகாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

"சரத் பொன்சேகா விரும்பினால் பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ள முடியும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள சம்புத்த ஜயந்தி விகாரைக்கு வழிபாடுகளுக்காக நேற்று முன்தினம் வருகை தந்திருந்தபோதே ஊடகவியலாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் "தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் 45 ஆண்டு காலமாக எதிரெதிர் அரசியல் முகாம்களில் செயற்பட்டவர்கள். ஆனால் நாங்கள் இன்று ரணில் விக்கிரமசிங்கவையும் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

சரத் பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியவர்.

அந்த வகையில் அவர் பொது ஜன. பெரமுனவில் இணைந்து கொள்ள விரும்பினால் எமது கதவுகள் என்றும் திறந்தே உள்ளது" என அவர் தெரிவித்தார். (நி-5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 412





நிதானித்துவிட்டு "நாம் உட்கார்ந்திருக்குமிடம் முன்னைவிட இப்போது உஷ்ணமாயிருக்கிறதே!" என்றான்.

"ஏதோ புகை நாற்றங்கூட வருகிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! இந்த இடத்தில் அபாயம் ஒன்றுமில்லையே?" என்று ஆழ்வார்க்கடியான் கவலையுடன் கேட்டான்.

"அபாயம் ஏதாவது இருந்தால் காவேரியம்மன் கட்டாயம் வந்து எச்சரிப்பாள். கவலை வேண்டாம்!" என்று இளவரசர் கூறி மேலும் தொடர்ந்து சொன்னார்.

"அந்த இடத்தைவிட்டு உடனே தாவடியைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டோம். அப்படியும் நமது வீரர்களில் பத்துப் பேருக்குக் குளிர் காய்ச்சல் வந்துவிட்டது. அம்மம்மா! அந்தக் காய்ச்சல் மிகப் பொல்லாதது. எப்பேர்ப்பட்ட வீரனையும் கோழையாக்கிவிடும். உடம்பெல்லாம் போரில் காயம் பட்டும் கலங்காதவர்கள் மூன்று நாள் காய்ச்சலில் மனம் தளர்ந்து 'ஊருக்குப் போக வேண்டும்' என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். சோழர்களின் குலதெய்வமான துர்க்கா பரமேஸ்வரிதான் அந்த ஊமை ஸ்திரீயின் உருவத்தில் வந்து எங்களை அங்கிருந்து புறப்படச் செய்தாள் என்று கருதினேன். அதற்குப் பிறகும் தேவி என்னைக் கைவிட்டு விடவில்லை. நான் போகுமிடங்களுக் கெல்லாம் அவளும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள். வன விலங்குகள், மலைப் பாம்புகள், மறைந்திருந்த எதிரிகள் இத்தகைய பல ஆபத்துக்களிலிருந்து என்னைக் காப்பாற்றினாள். திடீரென்று எப்படித் தோன்றுவாளோ, அப்படியே மறைந்து விடுவாள். சில நாளைக்குள் அந்தத் தேவியுடன் முகபாவத்தினாலும் சைகைகளினாலும் பேசும் சக்தியை நான் பெற்றுவிட்டேன்.

பெரும்பாலும் அவள் உள்ளத்தில் நினைப்பதெல்லாம் என் நெஞ்சம் தெரிந்து கொண்டுவிடும். அது மட்டுமல்ல அம்மாதரசியைக் கண்ணால் பார்க்காமலேயே அவள் பக்கத்தில் எங்கேயோ இருக்கிறாள் என்பதை நான் அறிந்து கொள்வேன். இப்போது கூட நல்லது. நீங்கள் உடனே சென்று உங்கள் படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். தூக்கம் வாரா விட்டாலும் தூங்குவது போல் இருங்கள்! சீக்கிரம்!" என்றார் இளவரசர்.

அவ்விதமே இருவரும் சென்று படுத்துக் கொண்டார்கள். கண்களை மூடிக் கொள்ளவும் முயன்றார்கள். ஆனால் அவர்களை மீறிய ஆவலினால் கண்ணிமைகள் மூடிக் கொள்ள மறுத்தன.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே நிலா வெளிச்சம் வந்த பலகணியின் அருகில் ஓர் உருவம் வந்து நின்றது. வீதியில் இடிந்து விழுந்த மாளிகைக்கு எதிரில் பார்த்த அதே ஸ்திரீயின் உருவந்தான். மிக மெல்லிய 'உஸ்' என்ற சத்தம் அங்கிருந்து வந்தது. அருள்மொழிவர்மர் எழுந்து பலகணி ஓரமாகச் சென்றார். வெளியில் நின்ற உருவம் ஏதோ சமிக்ஞை செய்தது.

இளவரசர் அந்த அறையில் படுத்திருந்த தன் தோழர்களைச் சுட்டிக் காட்டினார். சமிக்ஞை பாஷையில் அதற்கும் ஏதோ மறுமொழி கிடைத்தது.

உடனே அருள்மொழிவர்மர் தோழர்கள் இருவரையும் தன்னை தொடர்ந்து வரும்படி சொல்லிவிட்டு அம்மாளிகையிலிருந்து வெளியேறினார். அந்த மூதாட்டி சென்ற வழியில் மூவரும் மௌனமாக நடந்தார்கள்.

(தொடரும்)

அந்தப் பயங்கரமான ஓலக் குரலை இனிக் கேட்க வேண்டாம் என்று எண்ணி அவர்கள் உற்சாகமடைந்தார்கள்.

### முப்பத்தெட்டாம் அத்தியாயம் சித்திரங்கள் பேசின!

இளவரசர் சட்டென்று கதையை நிறுத்திவிட்டு, "உங்களுக்கு ஏதாவது காலடிச் சப்தம் காதில் விழுந்ததா?" என்று கேட்டார்.

கதையில் முழுக் கவனம் செலுத்தியிருந்த தோழர்கள் இருவரும் தங்களுக்கு ஒன்றும் கேட்கவில்லை என்றார்கள்.

ஆழ்வார்க்கடியான் சற்று




# சிறுவர் அரங்கம்

## யானையும் தையல்க்காரரும்

ஒரு கிராமத்துல ஒரு குட்டி யானை இருந்துச்சு. அது தினமும் ஊருக்குள்ள வந்து ஊர் மக்கள் கொடுக்குற உணவ சாப்பிட்டு திரும்பி போயிடும்.

அந்த ஊருல ஒரு தையல்க்காரன் இருந்தான். அவனுக்கு இந்த யானைய பார்த்தாலே பிடிக்காது.

இம்புட்டு பெரிய உடம்ப வச்சுக்கிட்டு இந்த யானை உழைக்காம அடுத்தவங்க கொடுக்குற சாப்பாட்ட சாப்பிட்டு நிம்மதியா இருக்கேனு வயித்தெரிச்சல் பட்டான் அந்த தையல்



காரன்.

ஒருநாள் கிராமத்துக்கு வந்த அந்த யானைக்கு எல்லாரும் நிறைய தண்ணி கொடுத்தாங்க.

அப்ப ஒரு பையன் அந்த யானை மேல சவாரி செய்யணும்னு கேட்டான். உடனே அந்த யானை அந்த பையன தன்னோட முதுகுல தூக்கிகிட்டு நடந்துச்சு.

இத பார்த்த அந்த பையனோட குடும்பம் ரொம்ப சந்தோஷமாகிட்டாங்க, உடனே அந்த யானைக்கு நிறைய சாப்பிட கொடுத்தாங்க.

அப்பதான் அந்த தையல் காரனோட கடைக்கு போச்சு அந்த யானை, அந்த யானை மேல கோபத்துல இருந்த அந்த தையல் கடைக்காரன் ஒரு வாழைப் பழத்துல ஊசியை வச்சு அதுக்கு கொடுத்தான். அந்த வாழை பழத்தை சாப்பிட்ட யானையோட வாயில அந்த ஊசி குத்திடுச்சு.

யானைக்கு ரொம்ப வலிச்சத்தால தன்னோட வாய பக்கத்தில இருக்குற ஆத்துல இருக்குற தண்ணில நனைச்சுச்சு. அப்பதான் அந்த ஆத்துல நிறைய சேரும் சகதியும் இருக்குறத பார்த்துச்சு யானை.

தன்னை தொந்தரவு செஞ்ச அந்த தையல் காரனுக்கு நல்ல பாடம் புகட்டணும்னு நினச்ச யானை தன்னோட துதிக்கையில நிறைய சேத்து தண்ணிய உறிஞ்சி எடுத்திடுச்சு.

நேரே தையல் கடைக் காரனோட கடைக்கு போயி, அங்க இருந்த புது துணிங்க மேல எல்லாம் அந்த சேத்த புஷ்னு ஊதி அழுக்காகிடுச்சு.

சேத்து நீர் பட்ட புது துணிங்க எல்லாம் வேஸ்ட்டா போனதனால அந்த துணிய தைக்க கொடுத்த எல்லாரும் வந்து அந்த தையல் கடைகாரன் கிட்ட சண்டை போட்டாங்க.

யானைய பார்த்து வயித்தெரிச்சல் பட்ட தன்னோட கடை இப்படி ஆனத நினச்சு வருத்தப்பட்டான் அந்த தையல் கடைக்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்களுக்கு ஆதரவானவர்களை தென்பகுதியில் இனங்காணுங்கள்

எங்களிடம் பலமான அரசியல் இராஜதந்திரம் இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதாவது எங்கள் இனத்தின் உரிமையை எங்ஙனம் வென்றெடுப்பது என்பது தொடர்பில் எங்களிடம் ஆரோக்கியமான வியூகங்கள் எதுவுமில்லை.

மாறாக, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றதான அரசியல் மட்டுமே இப்போது நம் மத்தியில் உள்ளது.

இதை இன்னும் தெளிவுபடுத்துவதாக இருந்தால், சுயநல அடிப்படையில் உருவான அரசியல் மட்டுமே நமக்கானது.

உண்மையில் தமிழ் இனம் தனக்கான உரிமையைப் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற சிந்தனை நம் அரசியல் தலைமைகளிடம் இருந்திருக்குமாயின், அவர்கள் நிச்சயம் ஒரு குறித்த இலக்குடன் தங்கள் அரசியல் பயணத்தை முன்னெடுத்திருப்பர்.

அந்த அரசியல் முன்னெடுப்பில், அத்தனை தமிழ் மக்களும் பங்காளர்களாக உள்வாங்கப்பட்டிருப்பர்.

ஆனால் இப்போது தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியலுக்குமான உறவு என்பது தேர்தலின்போது மக்கள் வழங்குகின்ற வாக்குகளில் மட்டுமே தங்கியுள்ளது.

மற்றும்படி தங்களுக்கு ஏற்றாற்போல்– தங்களுக்கு வில்லங்கம் ஏற்படாதவாறு – சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப அங்கும் இங்குமாக காய் நகர்த்துகின்ற அரசியலே நம் மத்தியில் உயிர்ப்போடு உள்ளது.

உண்மையில் தமிழ் இனம் தனது உரிமைப் போராட்டத்தில் வெற்றியடைய வேண்டுமாயின், தென்பகுதி சிங்கள மக்களில் நீதியான கருத்தை உரைக்கவல்ல, தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடைய, சிங்கள மக்களை எமக்கான சக்தியாக நாம் உருவாக்கியிருக்க வேண்டும்.

அதாவது தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கக்கூடாது என்று பேரினவாத சிங்களத் தரப்புக் கோசம் போடும்போது, அதனை எதிர்த்து இல்லை; தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிமையை வழங்காமலும் – அவர்களை சிங்களப் பேரினவாதம் அடக்குமுறைக்கு உட்படுத்தியதாலும் – தன் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகக் கொடும் போர் நடத்தியதாலுமே இலங்கைத் திருநாடு கந்தறுந்து கிடக்கிறது.

இந்த மிகமோசமான அவல நிலையில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதாக இருந்தால், இலங்கையில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையோடு வாழுகின்ற சூழமைவு உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை சிங்கள மக்கள் முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு சிங்கள மக்கள் நடுநிலை நின்று தமது கருத்தை முன்வைக்கும்போதுதான், சிங்களப் பேரினவாதிகள் இனவாத – மதவாத சிந்தனையில் இருந்து விடுபடுவர்.

உதாரணத்துக்கு, காணாமல் போனவர்களின் உறவுகள் நேற்று முன்தினம் (20) கிளிநொச்சியில் நடத்திய பேரணியில் பௌத்த பிக்கு ஒருவர் கலந்துகொண்டு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை ஆதரித்திருந்தார்.

இதுபோல தமிழ் மக்களுக்கு ஆதரவுப் போக்குடைய சிங்கள மக்களை – பௌத்த பிக்குகளை – இஸ்லாமிய சகோதரர்களை நாம் ஓரணியில் திரட்ட வேண்டும். இதைச் செய்வது எங்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான முதற்தரப் பணி. இருந்தும் அதை நாம் இன்றுவரை செய்யவில்லை என்பதுதான் எம் தமிழ் இனத்தின் மிகப்பெரும் தவறு.

# இந்தியர்களுக்கு சாதகமாக எட்கா ஒப்பந்தம் அமையும்

## பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர

(கொழும்பு)

நாட்டின் முக்கிய கேந்திர மையங்களான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு நேரடித் தாக்கங்களை ஏற்படுத்தும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவுக்கு சாதகமாக செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு தற்போது சற்று மீண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் வெற்றி பெற்றுள்ளது என்பதையும்,மக்களுக்கு பெரும் தடையாக இருந்த போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வந்ததையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்கு சாதகமான செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவின் ரூபாவை இலங்கையில் பாவிப்பதற்கும், இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக அடையாளப்படுத்துவதற்கும் எடுக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒரு போதும் ஆதரவு வழங்க போவதில்லை. கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

நாட்டின் முக்கிய கேந்திர மையங்களாக உள்ள விமான நிலையம் மற்றும் துறைமுகங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவதால் நாட்டின் தேசிய பாதிப்பு நேரடியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் என்பதை வெளிப்படையாக குறிப்பிட வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திட விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்தியாவில் 44 இலட்சம் பேர் தொழில்வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள்.

அதேபோல் 2 இலட்சம் வைத்தியர்களும், 15 இலட்சம் பொறியியலாளர்களும் தொழில் இல்லாமல்.இருக்கிறார்கள்.எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு இவர்களுக்கு இலங்கையின் தொழிற்துறைகளை வழங்கினால் இலங்கையின் இளைஞர், யுவதிகளின் நிலை என்னவாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. ஆகவே மாற்றீடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரிக்ஸ் அமைப்புடன் ஒன்றிணைவது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தான் பொருளாதார நெருக்கடி ஆரம்பமானது என்றார். (ம-7)

## நல்லாட்சியின் போதே

# நிறைவேற்று அதிகாரத்தை நாம் ஒழிக்க முயன்றோம் - ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போது அதனை செயற்படுத்த முடியவில்லை" என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்து செய்வதாயின் ஜனாதிபதி தேர்தலுக்கான வீண் செலவீனங்களை முதலில் நிறுத்த வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஜனாதிபதிக்கான அதிகாரங்களை குறைத்து பாராளுமன்றுக்கும் பிரதமருக்குமான அதிகாரங்களை அதிகரிப்பதற்கான யோசனை திட்டத்தினை நாம் கொண்டுவந்தோம்.

எனினும் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களை பாதுகாக்கும் வகையில் சிலர் சில திட்டங்களை கொண்டுவந்தார்கள்.

இதனால் ஜனாதிபதி முறைமையை நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் இரத்து செய்யமுடியவில்லை என்றார்.

(ம-7)

# நிகழ்நிலை சட்டம் சட்ட விரோதமாக நிறைவேற்றப்பட்டது - சஜித்

நிகழ்நிலை காப்பு சட்டம் சட்டவிரோதமாகவே நிறைவேற்றப்பட்டது. சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினது பொறுப்பு எனவே இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (21) விசேட கூற்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அரசியலமைப்பின் 123 (4) இன் பிரகாரம், ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து,அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மூலம் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிகழ்நிலை காப்பு சட்டத்தின் 9 சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு முரணாக தமது சொந்த தேவையின் நிமித்தம் நிறைவேற்றும் செயலில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றார். (ம-7)

# கரப்பந்தாட்ட பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கரப்பந்தாட்ட விதிகள் சம்பந்தமான பயிற்சி வகுப்பு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் இடம்பெறவுள்ளது என மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(நி-5-6)

# கடற்படைக்கு புதிய பணிக்குழாம் பிரதானி

## ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் புதிய பணிக்குழாம் பிரதானியாக ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க, மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன்.

அவர் 1987 இல் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுப் பிரிவில் கெடட் அதிகாரியாக இணைந்து தமது கடமைகளை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

தற்போது வாழும் மூத்த தலைமுறையினர் தற்போதும் இப்படி ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இளம் வயதினரில் கூட மனைவி கணவனை "அப்பா" என்று அழைப்பது தற்போதும் வழக்கத்தில் உள்ளது.

அநேகமாக கணவன் மனைவியை பெயரிட்டு அழைப்பதே வழக்கத்தில் உள்ளது. மனைவியும் கணவனை பெயரிட்டு அழைப்பதும் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது. திருமணமான புதிதில் மனைவி கணவனை அத்தான் என்று அழைக்கும் வழக்கமும் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இவ் வழக்கம் தமிழகத்துப் பழைய திரைப்படங்களில் இருந்து பெறப்பட்டிருக்கலாம்.

அக்காவின் கணவரை அத்தான் அல்லது மைத்துனர் என்றும் தங்கையின் கணவரை மச்சான் என்றும், அண்ணாவின் அல்லது தம்பியின் மனைவியை மச்சாள் என்றும் அழைத்தனர். அண்ணி என்ற சொல் மிக அரிதாகவே யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் மாமா, மாமியின் மகனை மச்சான் என்றும் அவர்களின் மகளை மச்சாள் என்றும் அழைக்கும் வழக்கமும் இருந்து வந்தது.

### யாழ்ப்பாணத்துக்குச் சிறப்பான சொற்கள்

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் பயன்படுகின்ற சொற்கள் பல அப்பகுதிக்கேயுரிய சிறப்பான பயன்பாடுகளாக அமைகின்றன. இவ்வாறான சொற்களில் சில வற்றைக் கீழே காணலாம்.

### சிறப்பான சில பெயர்ச் சொற்கள்

ஆம்பிளை (ஆண்), இளந்தாரி (இளைஞன்), ஒழுங்கை (ஒடுங்கியதெரு), கமம் (விவசாயம்/ வயல்), கமக்காரன் (விவசாயி), காசு (பணம்), காணி (நிலம்), கொடி (பட்டம்), சடங்கு (விவாகம்), திகதி (தேதி), பலசரக்கு (மளிகை), பெட்டை (சிறுமி), பெடியன் (சிறுவன்),பேந்து/பிறகு (பின்பு), பொம்பிளை (பெண்), முடக்கு (பாதைத்திருப்பம்),வளவு (வீட்டுநிலம்), வெள்ளாமை (வேளாண்மை)

### சிறப்பான சில வினைச் சொற்கள்

கதை (பேசு), பறை (பேசு), பாவி (பயன்படுத்து), பேசு (ஏசு), விளங்கு (புரிந்துகொள்), வெளிக்கிடு (புறப்படு/உடை அணிந்து தயாராகு) என்பன. பின்வருவன சில வினையெச்சங்கள் ஆகும். ஆறுதலா (மெதுவாக),கெதியா (விரைவாக) என்பன.

### சிறப்பானதன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் அதிக வேறுபாடுகள் இல்லாவிட்டாலும், சில சிறப்பம்சங்களை இங்கே காணலாம். படர்க்கையில், அண்மைச்சுட்டு (இகரம்) , சேய்மைச் சுட்டுச்சொற்களுடன் (அகரம்) சேர்த்து, முன்னிலைச் சுட்டுச் சொற்களும் (உவன், உது), யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் புழங்குகின்றன.

இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு - இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே இஃது அண்மைச் சுட்டு எனப்படும்.அவள், அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே இஃது சேய்மைச் சுட்டு எனப்படும்.

அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட "உ" என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இச்சுட்டெழுத்துகளுள் அ, இ என்னும் இரண்டுமே தற்கால வழக்கில் உள்ளன. உ என்னும் சுட்டெழுத்து மறைந்து விட்டது. தற்பொழுது மறைந்துவிட்ட போதிலும் சங்ககாலத்தில் இது வழக்கில் இருந்துள்ளது. ஆனால் இது யாழ்ப்பாணத்து பேச்சு வழக்கில் உள்ளது.

இவையெல்லாம் பண்டைத் தமிழ் வழக்கின் எச்சங்கள் எனக் கருதப்படுகின்றது. இது தவிர, ஆண்பால், பெண்பால் இரண்டிலும் பன்மைப் பெயர்களும் (அவங்கள், அவளவை) பேச்சுத் தமிழில் உள்ளன. இது எழுத்துத் தமிழில் இல்லாத ஒரு பயன்பாடு ஆகும். நீங்க, இவங்கள், உவன், உவங்கள், இவளவை, உவளவை, இவையள், அவையள், உவர், உவையள், இதுகள், அதுகள், உதுகள் போன்ற சொற்களும் பேச்சுத் தமிழில் உள்ளன.

மேலே காணப்படும் முன்னிலைச் சுட்டுப் பெயர்கள் இன்றும் யாழ்ப்பாணத்தில் வழக்கில் உள்ளதாயினும் இன்று இச்சொற்கள் அண்மைச் சுட்டுப்பெயர்களுடன் ஒன்றுக் கொன்று மாற்றீடாகத் தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு இவற்றுக்கான தெளிவான பயன்பாடு இல்லாமற் போனதனால் போலும் தமிழ் நாட்டில் இவற்றின் புழக்கம் இல்லாமல் போய் விட்டது. யாழ்ப்பாணத்திலும் பெரும்பாலும் பழைய தலைமுறையினரும், கிராமத்து மக்களும் தான் இச்சொற்களைக் கூடுதலாகப் பயன்படுத்துகிறார்கள்.

மற்றைய சில முன்னிலைச் சுட்டுப் பெயர்களான உவன், உவள், உது, உவை, உவடம் (உவ்விடம்), உங்கை (உங்கே), உந்தா போன்ற பல சொற்கள் யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் தற்போதும் உள்ளன.

### வேற்றுமை உருபுகள்

யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் சொற்களுடன் வேற்றுமை உருபுகள் சேரும் போது எழுத்துத் தமிழிலிருந்து வேறுபடுவதை அவதானிக்கலாம். அவனால் என்பதை அவனாலை என்றும் அவனோடு என்பதை அவனோடை என்றும் அவனது/அவனுடைய என்பதை அவன்ரை என்றும் அவனில் என்பதை அவனிலை என்றும் வேறுபாடுகள் உள்ளன.

### இடம், பால், காலம்

இடம், பால், காலம் காட்டும் விகுதிகள் சொற்களுடன் சேரும் போதும் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் பல வேறுபாடுகளைக் காட்டுகின்றது. செய் என்னும் வினைச் சொல்லுடன், மேற்படி விகுதிகள் சேரும் போது உருவாகும் பேச்சுத் தமிழ்ச் சொற்கள் பல அவை செய்தன், செய்தனான், செய்யிறன், செய்வன், செய்தம், செய்தனாங்கள், செய்யிறம், செய்வம் செய்தா, செய்தனீ, செய்யிறா, செய்வா, செய்தீங்க, செய்தீங்கள், செய்தனீங்கள், செய்யிறீங்க, செய்யிறீங்கள், செய்வீங்க, செய்வீங்கள், செய்யிறீர், செய்யிறான், செய்தாங்கள், செய்தவங்கள், செய்யிறாங்கள், செய்வாங்கள், செய்யிறாள், செய்தாளவை, செய்யிறாளவை, செய்வாளவை, செய்தவை, செய்திச்சினம், செய்யினம், செய்வினம், செய்யிது, செய்ததுகள், செய்யுதுகள் என்பனவாகும்.

### பறை என்பது ஒரு தூய தமிழ்ச் சொல்லா?

பறை எனும் சொல் ஒரு தூய தமிழ் சொல்லாகும். இச்சொல் பறை எனும் பெயரில் ஒரு இசைக் கருவிக்கான பெயர்ச் சொல்லாக பயன்பட்டாலும் வினைச் சொல்லின் பயன்பாடுகளும் உள்ளன. குறிப்பாக இச்சொல்லினதும், இச்சொல் தொடர்பான சொற் பயன்பாடுகளும் யாழ்ப்பாணத் தமிழர் பேச்சு வழக்கில் இன்றும் உள்ளவைகளாகும்.

பழங்காலத் தமிழர் வாழ்வியலில் செய்தியூடகம் என்று ஒன்று இல்லாத கால கட்டத்தில், ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை, அறிவித்தல்களை, அரச கட்டளைகளை ஊர் ஊராகச் சென்று சொல்லுதல் "பறைதல்" என்றும் அவ்வாறு ஊர் ஊராகச் சென்று சொல்பவர் "பறையர்" என்பதும் காரணப் பெயர்களாகும். காலப்போக்கில் தமிழர் வாழ்வியலின் சாதிய வேறுபாடுகளின் அடிப்படையில் பறை, பறையர் எனும் தூயத் தமிழ் சொற்கள் தொழில் நிலையை குறிக்கும் பெயராக மாற்றம் பெற்றுள்ளன.

அதேவேளை ஊரூராகச்சென்று செய்திகள், அறிவித்தல்கள், அரச மற்றும் நிர்வாகக் கட்டளைகள் போன்றவற்றை பறைபவர் (சொல்பவர்), தற்போதையதற்கால ஒலிப் பெருக்கி போன்ற சாதனங்கள் இல்லாத நிலையில் உரத்த குரலில் சத்தமிட்டே பறையவேண்டிய கட்டாயச் சூழல் இருந்திருக்கும் என்பதை இன்றைய சூழ்நிலையில் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். அத்துடன் உரத்தக்குரலில் சத்தமாகப் பறைபவர் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு கருவியின் துணை கொண்டு, அதனை ஓங்கி அடித்து ஒலியெழுப்பி, தான் கொண்டு வந்த செய்தியை, அல்லது அறிவித்தலை மக்களுக்குப் பறைவார்.

இதனால் காலப் போக்கில் "பறை" எனும் வினைச்சொல், பறையும் பொழுதும் மக்களை ஈர்ப்பதற்கு பயன்படுத்திய ஒலியெழுப்பிய கருவிக்கான பெயர்ச்சொல்லாக நிலைத்து விட்டது. அத்துடன் தற்போதைய தற்கால ஒலி பெருக்கி போன்ற சாதனங்கள் இல்லாத நிலையில் உரத்தக் குரலில் சத்தமிடுவதால் அல்லது சத்தமிட்டு பறையும் தொழிலை கொண்டிருப்பவர் என்பதால், பறைபவர் ஏனைய தமிழ் சமுதாயக் கட்டமைப்பின் கீழ் ஒரு தரக் குறைவான தொழில் நிலையாகத் தோற்றம் பெற்றது எனலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ஆயிரம்...

பட்டுள்ளார்.

சந்தேகநபர் கல்கிசை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கல்கிசை குற்றப் புலனாய்வு பிரி வினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந் தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அவரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணையில் சந்தேக நபரிட மிருந்து 10 ஆயிரம் போதை மாத்திரை கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

## பயங்கரவாத...

சட்டமூலத்தின் சில சரத்துகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கி யுள்ள தீர்மானங்களை விரிவாக ஆராய்ந்ததன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தின் பல சரத்துகளை அவ்வாறே நிறைவேற்றுவதாக இருந்தால் அதற்கு விசேட பெரும்பான்மை தேவையென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சட்டமூலத்திலுள்ள மேலும் 2 சரத் துக்களை அவ்வாறே நிறைவேற்று வதாக இருந்தால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை யுடன், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் பட வேண்டுமென உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜ பக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பண வீக்கம்...

வீக்கம் அதிகரித்துள்ளதாக கூறப்படு கின்றது. அந்த குறியீட்டின்படி, 2023 டிசம்பரில் பணவீக்கம் 4.2 சதவீதமாக பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், 2023 டிசம்பரில் 1.6 சதவீதமாக இருந்த உணவுத் துறை யில் பணவீக்கம் 2024 ஜனவரியில் 4.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. (ம-7)

## யாழ்.இந்திய...

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத் தின் புதிய துணைத் தூதராக சாய்முரளி (வயது-33) அடுத்த வாரத்தில் பதவி யேற்கவுள்ளார்.

யாழில் உள்ள இந்திய தூதரகத் தின் துணைத் தூதுவர் ராஜேஷ் நட் ராஜின் பதவிக் காலம் எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் நிறைவுறும் நிலை யில் அவர் டில்லிக்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

இதனால் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஏற்படும் வெற் றிடத்திற்கே சாய்முரளி நியமிக்கப் பட்டுள்ளார். 1991ஆம் ஆண்டு பிறந்த சாய்முரளி 2019ஆம் ஆண்டு வெளி விவகார அமைச்சில் இணைந்து தற் போது வரை ரஷ்யாவின் மாநிலம் ஒன் றில் இந்தியத் தூதரகத்தின் கொன்ஸி லர் ஜெனரலாகப் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## போதைக்கு...

மேலும், 2023 டிசம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட "யுக்திய" நடவடிக் கையின் மூலம் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி 7.8 பில்லியன் ரூபாய் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டிரான் அலஸ்,

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்குதல் மற்றும் பெண் கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பது தொடர் பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் இந்த செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நாங்கள் தயாராக இல்லை.

இந்த வேலைத்திட்டம் தொடர்பில் எம்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த செயற்பாட்டைச் சீர்குலைக்க பல்வேறு நபர்களும் குழுக்களும் முயற்சித்து வருகின்றனர். போதைப்பொருள் வலையமைப்பு மூலம் பணம் பெறுப வர்கள் அந்தக் குழுக்களுக்குப் பணத்தை செலவிடுவதாக எமக்கு தக வல் கிடைத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட "யுக்திய" நடவடிக் கையின் மூலம் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி 7.8 பில்லியன் ரூபாயாகும். பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி 725 மில்லி யன் ரூபாய். அதற்காக செய்யப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை 58, 562. அந்த நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 58,234 ஆகும் என்றார். (ம-7)

## உரிய காலத்தில்...

அவர் மேலும் கருத்துரைக்கையில், "அரசாங்கம் மேற்கொண்ட பொரு ளாதார மறுசீரமைப்புகளின் பயனை இலங்கை மக்கள் அனுபவிக்க ஆரம் பித்துள்ளனர். விரைவில் மின்சாரக் கட்டணம் குறையவுள்ளது. கிராமிய பொருளாதாரம் அபிவிருத்தியை நோக்கி நகரவுள்ளது.

மக்கள் கடுமையான நெருக்கடியில் இருந்தனர். அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும திட்டத்தில் 2 மில்லியனுக் கும் அதிகமான மக்களுக்கு நிவா ரணம் வழங்கப் பட்டுள்ளது.

அதனால் எந்தவொரு தேர் தலையும் எதிர் கொள்ள அரசாங் கம் தயாராக உள் ளது. ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நடைபெறும்.

ஜனாதிபதித் தேர்தலை அர சாங்கம் நடத்தா தென்றும், சர்வ ஜன வாக்கெடுப் பொன்றை நடத்த திட்டமிடுவதாகவும் கூறுகின்றனர். அவ்வாறெனின் ஏன் எதிர்க்கட்சி கள் தேர்தலுக்கு தயாராகின்றன எனக் கேள்வி யெழுப்ப வேண்டி யுள்ளது.

நான் பொறுப்பு டன் கூறுகிறேன், உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர் தல் நடைபெறும். முடிந்தால் ஜனா திபதித் தேர்த லில் வெற்றி பெற்று காட்டு மாறு எதிர்க்கட்சி களுக்கு சவாலும் விடுக்கிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிரைக் காப் பாற்றி, நாட்டின் பொருளாதார த்தை சரியான பாதைக்கு திசை திருப்பிய தலை வரை தவிர வேறு தலைவர் களுக்கு மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள்.

மக்களை ஏமா ற்றி போலிச்செய்தி களைபரப்ப வேண் டாம். பேசு வதற்கு கருத்து கள் இல்லாமை யால் ஜனாதிபதித் தேர்தல் பற்றி பேசு கின்றனர். நாட்டில் அரசியலமைப் பொன்று இருக்கின்றதென தெரியாத முட்டாள்களாக இவர்கள்? எனவும் அவர் கேள்வியெழுப்பினார். (ம-7)

## அனைவரும்...

நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கோணேஷ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 10ஆவது தேசிய சார ணர் ஜம்போரியை நேற்று ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையிலேயே ஜனாதி பதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இனம், மதம் என்ற அடிப்படையில் எவரும் சாரணர் ஜம்போரியில் இணைந்து கொள்வதில்லை எனத்தெரிவித்த ஜனாதி பதி, அனைத்து தருணங்களி லும் இலங்கையர்களாக ஒன்றுபடும் பட்சத் தில் பருத்தித்துறையில் இருந்து தேவேந் திரமுனைவரை ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமென வலியுறுத்தினார். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2024.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 0223
D 7 6 3 5 9 6 D

தன நிதானய
திகதி - 2024.02.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1427
I 13 16 19 29 I
15770

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3639
சீட்டிழுப்பு திகதி 21.02.2024
H 02 10 48 49
H 72199

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 0706
துலாம் 08 19 35 39 துலாம்
49576 16

மஹஜன சம்பத
திகதி 2024/02/21
சீட்டிழுப்பு இலக்கம் 5397
W 9 0 0 7 0 9

மெகா பவர்
திகதி 21/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1745
H 17 13 28 44 45
18934

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2197
சீட்டிழுப்பு திகதி : 2024.02.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,054,509.60
14 25 39 75 I

ஜயோதா Jayoda
திகதி 2024.02.21 வெற்றி வாரம் 2002 வர்ணம் மஞ்சள்
06 30 61 67 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,104,458.80

G 31 03 33 40 56
1547
21.02.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 507,470,726.20

சீட்டிழுப்பு வாரம் 4083 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.21 தினம் புதன்கிழமை
02 31 39 40 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,911,812.00

சனிதா Shanida
திகதி 2024.02.21 வெற்றி வாரம் 4532
08 43 46 58 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,551,757.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2371 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.21 தினம் புதன்கிழமை
15 62 69 72 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,957,661.60

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.02.2024 வெற்றி வாரம் 105 பசுமை
R 7 8 9 9 2 8
P
29,547,860.00
DLB Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்


வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19178)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# மரண அறிவித்தல்

## திரு.பூலோகசிங்கம் சவுந்தரராஜா



மண்ணில் 21.03.1966 — விண்ணில் 19.02.2024

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் ஓபர் வில்லியசை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பூலோகசிங்கம் சவுந்தரராஜா அவர்கள் 19.02.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம் - நவமணி தம்பதியரின் அன்பு மகனும் திரு. திருமதி ஜெகநாயகம் கொன்ஸ்ரன்ரைன் டேனியல் - மரிய புஷ்பராணி பெனடிக்ற் அய்யாத்துரை தம்பதியரின் மருமகனும் கிறிஸ்ரின் ஜெயசுமதி அவர்களின் அன்புக் கணவரும் சிவாசினி சோபியா, சிவாஸ்கர், ரோஷினி, அஸ்வினி ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராஜா (இலங்கை), யோகமலர்(பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதராஜன் மற்றும் பூமலர்(இலங்கை), சாந்தமலர்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவி(இலங்கை), மைக்கேல் நாயகம்(பிரான்ஸ்), ராஜேஸ்வரி (இலங்கை), யுவராஜ்(இலங்கை), குகதாஸ்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாளன், தயாளினி, உஷா, தர்ஷா, கிரி ஆகியோரின் சிறிய தந்தையும் மனோரஞ்சித், வசிகரன், தேவானந்தன், தயானந்தன், கீர்த்தனா, சுபர்சன், சோபனா, அர்தனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.02.2024 வியாழக்கிழமை காலை 11.00 தொடக்கம் 13.00 மணி வரை நடைபெற்று மதியம் 13.00 - 14.30 மணியளவில் பிரான்ஸில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சகோதரன்
த.யோகராசா(பச்சடி)

78/3, திருமகள் வீதி,
அரியாலை.
077 367 7478 (19210)


மற்றுமொரு புதிய பஸ் சேவை
ஆரம்பித்துள்ளனர்
Village Hotel Jaffna Express
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் → உரும்பிராய் → திருநெல்வேலி → யாழ்ப்பாணம் → கொழும்பு
கட்டணம் - 2700/=
தொடர்புகளுக்கு
077 544 8503 (19118)

தோட்ட வேலைக்கு
தெல்லிப்பளை மாவிட்டபுரத்தில் தங்கி இருந்து தோட்ட வேலைக்கு 50 வயதிற்கு மேல் (குடும்பத்துடன்) தேவை
தொடர்புகளுக்கு :
077 873 0129 (19204)

தமிழ் A/L 2024 2025
பா. யுகந்தன்
BA (Hons) in Tamil
* செய்யுள் மற்றும் இலக்கணப் பகுதிகள் இலகுபடுத்தப்படும்
தனியாள் மற்றும் குழு வகுப்புகள்
கல்வி நிலையங்களும் அணுகலாம்
யாழ்ப்பாணம்
தொடர்பிற்கு
0773206894
(19209)

மணப்பெண் தேவை
- மயிலிட்டி - கொக்குவில். இந்து. கௌரவகுலம். 1985. ரோகிணி. Dip in international Business கனடா Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி - நவிண்டில், இந்து, கௌரவகுலம், 1981, புனர்பூசம் Supermarket owner, UK Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், 1986, பூரட்டாதி, Graduate, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அரியாலை, இந்து, கௌரவகுலம் 1984, பூசம், Computer network Engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சுதுமலை, இந்து, கௌரவகுலம், 1989, உத்தரம், Software engineer, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- முல்லைத்தீவு, இந்து கௌரவகுலம், 1993, ரேவதி, BSc Engineering, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- உடுப்பிட்டி - தாவடி, இந்து, கௌரவகுலம், 1982, அனுசம், Business Manager, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அச்சுவேலி - நவாலி, இந்து, கௌரவகுலம், 1953, உத்தரம், Germany citizen, widower மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம், இந்து, கௌரவகுலம், 1992, விசாகம், BSc Civil Engineering CIMA, Fully qualified, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

S.Sharma J.P
Astrologer
- 077 539 3728
- 077 803 8193
(19205)


# மரண அறிவித்தல்



## சிவபாதசிங்கம் சாவித்திரிதேவி

வேம்போலை இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசிங்கம் சாவித்திரிதேவி அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவபாதசிங்கத்தின் (சண்முகம்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சவுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, பத்மாதேவி, செல்வரட்ணம் மற்றும் யோகம்மா, இராஜவரோதயம் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவாஜினி(கொழும்பு), சிவாஸ்கரன் (ஆசிரியர் - இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு), சிவானந்தி, சிவாஞ்சலி (கனடா), சிவாகரன் (ஆசிரியர் - மயிலினி சைவ மகா வித்தியாலயம், சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரகுமாரன் (சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கொழும்பு), யாழினி, சிவபாலன் (பரணி கிறீம் ஹவுஸ், கொக்குவில்), வசீகரன் (கனடா), புரந்தரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இராசமணி, கமலாதேவி, நடராசா, செல்லப்பாபிள்ளை மற்றும் அன்னலட்சுமி, வேலாயுதபிள்ளை, மகேந்திரலிங்கம், கிரிஜாலினி, றஞ்சிதபூபதி, சத்தியவதி ஆகியோரின் மைத்துனியும் விஸ்வதீப் (Monash University, Australia), சௌமியா (Deakin University, Australia), ஜனுயன், விதுஜன் (கனடா), கவிஸ்கா, அபிஷன், ஆருட்சன், அக்ஷிகா, அஷ்விகா, அஸ்விந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2024) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"வேம்போலை"
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:-
குடும்பத்தினர்
(19207)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org